Hale & Healthy HOSPITAL
Multi Speciality Since 1987
A1, Srinivasapuram, ECR, Thiruvanmiyur, Chennai - 600 041.
Contact
044-43090397/ 9677194440

# EXPRESS VELACHERY

Neighbourhood Newspaper - Weekly
Free Circulation

நாவில் நடனமாடும் சுவைக்கு
கங்கா ஸ்வீட்ஸ் GANGA SWEETS
PURE GHEE SWEETS
Contact
4264 5911 / 2615 4635

VOL - 4 ISSUE - 38 Editorial : 044-42077328 / 7305837388

## நூல் வெளியீட்டு விழா...



சென்னை வேளச்சேரி குரு நானக் கலையரங்கத்தில் செட்டிநாடு வித்யாஷ்ரம் பள்ளி மாணவி எழுத்தாளர் ஹாசினி லட்சுமிநாராயணன், இவர் பதினான்கு வயது நிரம்பிய இளம் எழுத்தாளர் ஆவார். இவரது இரண்டாவது புத்தகமான **Whizz Kidz** (Lessons from Little Legends). இந்நூலில் இளம் வயதில் குறிப்பிடத்தக்க சாதனைகள் படைத்த இருபது சாதனையாளர்களின் கதைகள் இடம்பெற்றுள்ளது. இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக வருமான வரித்துறை கூடுதல் ஆணையர் திருமிகு. நந்தகுமார் IRS அவர்கள் பங்கேற்றார். மேலும் எழுத்தாளர் ஹாசினி லட்சுமிநாராயணன், குரு நானக் கல்லூரி தாளாளர் மற்றும் செயலர் திருமிகு. மஞ்சித் சிங் நய்யார், எத்திராஜ் கல்லூரி தலைவர் திருமிகு. வி.எம். முரளிதரன், திருமிகு. குமரவேல், எமரால் பதிப்பகம் திருமிகு. ஒளிவண்ணன் கோபாலகிருஷ்ணன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கடந்த ஆண்டு சென்னை மாநகரில் நடைபெற்ற புத்தகக் கண்காட்சியில் வெளியிடப்பட்ட முதல் புத்தகத்தின் தொடர்ச்சியாக இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூலில் உள்ள சாதனையாளர்கள் கல்வி, விளையாட்டு, தொழில்முனைவோர் முதலான துறைகளில் சிறப்பான சாதனை நிகழ்த்திய இருபது சாதனையாளர்களின் கதைகள் இடம்பெற்றுள்ளது. இவர்கள் அனைவரும் பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் சாதனையாளர்கள் மட்டுமல்லாமல் சமூகத்தில் தன்னுடைய தனித்திறமையால் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியவர்கள் ஆவர்.

இந்நூலின் ஆசிரியர் ஹாசினி லட்சுமிநாராயணன் இளம் வயது மாணவி மட்டுமல்ல. தமிழ்நாடு அரசின் ICDS அமைப்பின் இளம் ஊட்டச்சத்து தூதுவர், TEDX பேச்சாளர், /பிரிலான்ஸ் எழுத்தாளர் ஆவார்.







இவரது பணிகளை இந்தியாவின் முன்னாள் துணை ஜனாதிபதி மாண்புமிகு. வெங்கையா நாயுடு, தமிழ்நாட்டின் ஆளுநர் திருமிகு. ஆர்.என். ரவி பாராட்டியுள்ளனர். மேலும் புதுச்சேரி அரசு ஆளுநர், தமிழக முதல்வர் பாராட்டியுள்ளனர். இவரது சிறப்பான பணிகளை அரசு மற்றும் தலைச்சிறந்த தலைவர்கள் பாராட்டியுள்ளனர். "இளம் சாதனையாளர்களின் கதைகளை எனது விஸ் கிட்ஸ் புத்தகத்தின் மூலம் பகிர்ந்துகொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த குழந்தைகள் சமூகத்தில் உள்ள பிற குழந்தைகளுக்கு முன்மாதிரியாக இருக்கிறாரகள். அவர்களுடைய கதைகள் மற்றவர்களுக்கு எடுத்து சொல்லவேண்டும் எனும் நோக்கத்தில் என்னுடைய புத்தகம் இன்று வெளியிடப்படுகிறது. மேலும் இச்சாதனையாளர்களின் கனவு-களைப் பின்பற்றி மிகப்பெரிய செயல்களில் வெற்றி பெறுங்கள்" என எழுத்தாளர் ஹாசினி லட்சுமிநாராயணன் குறிப்பிடுகிறார்.

இந்நூலின் சிறப்புகளை இளம் வாசகர்களிடம் கொண்டு செல்லும் நோக்கில் எமரால்டு பதிப்பகம் எழுத்தாளர் ஹாசினி லட்சுமிநாராயணன் இரண்டு நூல்களையும் வெளியிட்டுள்ளது. இந்நூல்கள் பல்வேறு பதிப்பகங்கள் மற்றும் ஆன்லைன் தளங்களிலும் கிடைக்கிறது.

நூல் தொடர்பான விவரங்களுக்கு, எழுத்தாளர் ஹாசினி லட்சுமிநாராயணன்
E-mail : slakshminarayanan@gmail.com
தொலைபேசி : 9841244500









## டான்சிநகர் நலவாழ்வு சங்கத்தின் சார்பாக நடைபெற்ற உலகமகளீர் தினவிழா...






மார்ச் 8, உலகமகளீர் தினத்தை முன்னிட்டு டான்சிநகர் நலவாழ்வு சங்கத்தின் சார்பாக 12-03-2023 ஞாயிற்றுக்கிழமை மாலை நான்கு மணிக்கு அருள்ஜோதி பப்ளிக் பள்ளியில் மகளீர் தினவிழா கொண்டாப்பட்டது. இந்தவிழால் வேளச்சேரி போக்குவரத்து பெண்காவலர்களை பாராட்டி கவுரவிக்கப்பட்டது. தாம்பரம் மேடவாக்கம் வேளச்சேரி கிண்டி ,மற்றும் தரமணி லிங்சாலை SRP Tools வரையும் மெட்ரோ ரயில் சேவையை விரைவில் கொண்டுவர வேண்டி தலைமைசெயலாளர், CMRL மேலாண்மை இயக்குனர் அவர்களுக்கும் கோரிக்கை மனு அனுப்ப முடிவுசெய்யப்பட்டு 13-03-2023 அன்று பதிவுத்தபால் மூலமாக அனுப்பப்பட்டது.











TANSI NAGAR WELFARE ASSOCIATION
(Regn. No. 65 of 1995)
No. 15/7, 14th Street, Tansi Nagar, Velachery, Chennai - 600 042.

| P. SHANMUGAM | M. BALAKRISHNAN | R.S. RAGHURAMAN |
|---|---|---|
| President | General Secretary | Treasurer |
| Mobile : 98414 78871 | Mobile : 91766 01710 | Mobile : 98407 29692 |

Ref. : Date : 13-03-2023

உயர்திரு. தலைமைச் செயலாளர் அவர்கள்
தமிழ்நாடு தலைமைச் செயலகம் – ஜார்ஜ் கோட்டை
சென்னை – 600 009.

பொருள் : தாம்பரம் - மேடவாக்கம் வேளச்சேரி SRP Tools வரை மெட்ரோ ரயில் சேவையை கொண்டு வர வேண்டி கோரிக்கை மனு.

ஐயா,

சென்னையில் பல இடங்களில் சென்னை மெட்ரோ ரயில் சேவை மிக சிறப்பாக பல இடங்களில் இயங்கி வருகிறது. பல இடங்களில் தொடங்கப்பட்டு பணிகள் நடைபெற்றும் வருகின்றன. இந்த சேவையால் போக்குவரத்து வாகன நெரிசல் மிகவும் குறைந்துள்ளது. பொதுமக்கள் குறித்த நேரத்தில் பணிக்கு செல்லவும் CMRL சேவை மிகவும் பயனுள்ளதாக இருக்கின்றது.

2011-ம் ஆண்டு மாண்புமிகு முன்னாள் முதல்வர் அவர்கள் மோனோ ரயில் திட்டத்தை சென்னையில் கொண்டு வர முயற்சிகள் மேற்கொண்டார். வேளச்சேரி, மடிப்பாக்கம் சந்திப்பில் இத்திட்டத்தை மேற்கொள்ள இருந்தது. இந்த ரயில் சேவை வந்திருந்தால் தாம்பரம் வேளச்சேரி வழியாக கிண்டி வரை இயக்கப்பட்டு இருக்கும் ஆனால் இந்த திட்டம் கைவிடபட்ட நிலையில் தற்போது தாம்பரம் மேடவாக்கம் வேளச்சேரி வழியாக SRP Tools மற்றும் கிண்டி ஆகிய வழித்தடங்களில் மெட்ரோ ரயில் சேவை தொடங்கபடாமல் இருக்கின்றது. இந்த பணி மேற்கண்ட சாலை வழியாக கொண்டு வந்தால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இந்த சாலைகளில் போக்குவரத்து வாகன நெரிசல் மிகவும் அதிகரித்துள்ளது. மற்றும் பொதுமக்கள் பணிக்கு செல்பவர்கள் மேற்கண்ட மார்க்கமாக மாநகர பேருந்தை பயன்படுத்தி வருகிறார்கள். மாநகர பேருந்துகளிலும் கூட்ட நெரிசல் மிகவும் அதிகமாக உள்ளது. குறித்த நேரத்திலும் பணிக்கு செல்ல முடியாத நிலை உள்ளது. பெண்கள், வயதானவர்கள், பள்ளி மாணவர்கள் இதனால் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகிறார்கள். மேற்கண்ட வழித்தடங்களில் மெட்ரோ ரயில் சேவையை கொண்டு வந்தால் போக்குவரத்து நெரிசல் பிரச்சனைகளுக்கு வழிவகுக்கும் ஆகவே மேற்கண்ட சாலைகளில் சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தை விரைவில் செயல்படுத்தி பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருமாறு பொதுமக்கள் சார்பாகவும் நலச் சங்கம் சார்பாகவும் தங்களை பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி

GENERAL SECRETARY
Tansi Nagar Welfare Association
No.15/7, 14th Street, Tansi Nagar,
Velachery, Chennai - 42.

# CLASSIFIED


**Commercial Space for Rent**

600 Square feet for 15,000/-@ ground floor

*31/14, Sarathy Nagar, 2nd street, Velachery ( Bethel Hr Sec School Opp )*

3 month rent as advance

CONTACT 8015427018

---

**WANTED**

Front Desk Executive

*(Male / Female)*

Ateliers Fitness Velachery, Behind A2b

*Contact* **9841030772**

---

**TMS YOGA AND ART'S CENTER**

SIMPLE SOLUTION TO LEARN

ONLINE & OFFLINE

*Contact*

9789098094
8012041624
9500090445

Velachery, Madippakkam, Keelkatalai.

---

**DESIGNING**

Tamil & English DTP designing works Rs. 750/- only

*Contact* **7305837388**

---

**Commercial Space for Rent**

850 Square feet for 27,000/- @ ground floor

*Diya Complex, Vijayanagar Main Road, Velachery (Near Ananda Bhavan)*

2 L as advance

CONTACT 7305837388

---

To Advertise about Your Business Rental House, Buying, Selling, Services & Job Vacancy Pay Rs. 100/- Only

---

**Mother Land**

*Play School, Day Care & After School Care*

*No.38, 2nd Street, Tansi Nagar, Vijayanagar, (Near ICICI Bank - Royal Shoppee) Velachery, Chennai - 600 042.*

*Contact*

**72992 62185**
**90947 52300**

---

**WANTED**

*Tele Callers*

CONTACT **7305837388**


Prevention Tips For COVID-19





**WOMAN'S WELLNESS YOGA CENTRE**

**Contact : 9444 122 922**

**TREATMENTS FOR**

- Headache / Migraine
  தலைவலி / ஒற்றை தலைவலி
- Sinusitis
  சைனஸ் தொந்தரவு
- Neck Pain / Cervical Spondylosis
  கழுத்து வலி
- Back Pain / Lumber Spondylosis
  முதுகு வலி
- Digestion Problems & GIT disorders
  வயிறு ரூ குடல் சம்பந்தமான தொந்தரவுகள்
- Uterine ailment like Fibroid
  கர்ப்பப்பை கோளாறுகள்
- PCOD
  மாதவிடாய் கோளாறுகள்
- Respiratory ailments, Asthama
  சுவாச கோளாறுகள்
- Diabetes & is Complications
  சர்க்கரை வியாதிகள்
- Cholastrol, BP
  கொலஸ்ட்ரால்இ ரத்த கொதிப்பு
- Thyroid Problems
  தைராய்டு பிரச்சனை
- Stress, Anxiety & Sleep Disturbance
  மன அழுத்தம் ரூ தூக்கமின்மை
- Weight Loss & Weight gain
  உடல் எடையை குறைக்க ரூ அதிகரிக்க
- General Health
  பொது மருத்துவம்
- Infertility
  குழந்தையின்மை

---

**CONSULTANT CATERING HOSPITALITY SERVICE**

**NFC**

NIMS FOOD CONSULTANT

E. KAMESH KUMAR IHM-MBA

Office:plot No:4,kumaran nagar, keelkattalai, chennai-600117

Adviser:K.VIJAYA KANCHANA MSC Food & Nutrition.

email:Nutritionnfc@gmc

Mobile:9790 902400

email:Consultantnfc@gmail.com


**சென்னையில் பெட்ரோல், டீசல் விலை நிலவரம்**

Friday Price



| பெட்ரோல் விலை | டீசல் விலை |
|---|---|
| விலை 1 லிட்டர் | விலை 1 லிட்டர் |
| 102.63 | ₹ 94.24 |


NISHA YOGA & MEDITATION CENTRE VELACHERY

Online Class for Women and Kids

*FOR ALL AGE CATEGORIES*

*CONTACT* **89391 53560**

---

**DESIGNING**

Tamil & English DTP designing works Rs. 500/- only

*Contact* **7358182075**

---

**WANTED**

LADIES TAILOR

**PRASUDRA Boutique**

No:2 LAKSHMI NAGAR, 2nd STREET, VELACHERY

*CONTACT - PREMALATHA*

**4435504719**
**8870393999**


**சென்னையில் தங்கம் மற்றும் வெள்ளி விலை நிலவரம்**

| | | | | |
|---|---|---|---|---|
| தங்கம் விலை - | 22 கேரட் | | 24 கேரட் | |
| | 1 கிராம் | 5450 | 1 கிராம் | 5940 |
| | 8 கிராம் | 43600 | 8 கிராம் | 47520 |
| வெள்ளி விலை - | 1 கிராம் | 73.10 | | |
| | 1 கிலோ | 73100 | | |

Friday Price


**TUITION CENTRE @ Velachery**

**Baby Nagar**

*For Students Till 9th Grade of Any Syllabus*

*Contact* **909 494 7285**

---

**Butter Flies**

Beauty Parlour & Beauty Training Institute

Recognised by Tamilnadu Governmen

Ladies & Kids Only

Consultant: Beauty tip & women empowerment (adviser)

No:1, MG NAGAR, ATHANUR - 603 202

binduinno@gmail.com

**80560 87391**
**81247 02731**

---

SHARAN TRAVELS

All kinds of Tourist vehicle available here Drivers Available

Contact V. Marimuthu

**9840508030**

---

**RENTAL**

LAND BUYING, SELLING

All Kind of Building Repair Works Undertaken

Contact B. Rajendran

**90809 94500**

---

**SERVICES**

Plumbing works

Contact Govindaswamy

87544 09752

ஆன்மீக தகவல்

# வன்னி மரத்தின் சக்திவாய்ந்த ஆன்மீகத்தகவல்கள்

வன்னி மரம் மிகவும் வசீகரமான மரம். இதனுடைய இலைகள் முதல் அனைத்தும் சிறப்பு வாய்ந்தது. வன்னி மரம் பாலைவனப் பகுதியில் கூட வளரக்கூடியது. வன்னி மரம் என்று சொன்னாலே விருதாச்சலம் என்றுதான் அனைவருக்கும் ஞாபகம் வரும்.

விருதாச்சலம் விருதகிரி ஆலயத்தில் பழமையான வன்னி மரம் இருக்கிறது. இந்த வன்னி மரத்தின் இலைகளைப் பறித்துதான் அந்தக் கோயிலைக் கண்டினார்கள் என்று சொல்வார்கள்.

எப்படி என்றால், அங்கு விபசித்தி முனிவர் என்று ஒருவர் இருந்தார். அந்த முனிவர் அங்கேயே வாழ்ந்து அங்கேயே ஒரு கோயிலைக் கட்டிவிட்டு ஜீவ சமாதியும் அடைந்திருக்கிறார். அவர் என்ன செய்வாரென்றால், தினசரி வேலையாட்களுக்கு அந்த வன்னி மரத்தின் கீழ் உட்கார்ந்து வன்னி இலைகளை உருவி அந்த வேலையாட்களுக்கு கொடுப்பாராம்.

அவர்கள் எந்த அளவிற்கு உழைத்தார்களோ அந்த அளவிற்கு அது பொன்னாக மாறுமாம். ஒன்றுமே உழைக்காமல் சுற்றிக் கொண்டிருந்தால் அது இலையாகவே இருக்குமாம். கடினமாக வேர்வை சிந்தி அனைத்தும் செய்தவர்களுக்கு அத்தனையும் தங்கமாக மாறுமாம். இது வரலாற்றுச் சான்றுகளில் இருக்கிறது. கல்வெட்டுச் சான்றுகளில் இருக்கிறது. அப்படியொரு சக்தி இந்த வன்னி மரத்திற்கு உண்டு.

இன்றைக்கும், குழந்தைப் பேறு இல்லாதவர்கள், மனநலம் குன்றியவர்களை அந்தக் கோயிலிற்கு அழைத்துச் செல்லலாம். அங்கு இன்னமும் அந்த பழமையான வன்னி மரம் இருக்கிறது. அதற்குக் கீழே விபசித்தி முனிவருடைய உருவமும் இருக்கிறது. அதை வழிபட்டால் எல்லா வகையிலும் சிறப்புகள் உண்டாகும்.

இந்த வன்னி மரப்பட்டையினுடைய கசாயம் குடித்தால் குழந்தை பாக்கியம் உண்டாகும். குறிப்பாக ரத்தத்தை சுத்தப்படுத்தக்கூடிய தன்மை இந்த வன்னிக்கு உண்டு. வன்னி மரக்காற்று பட்டால் கூட மிகவும் நல்லது. அந்தக் காற்றிலேயே தொடர்ந்து இருந்தால் சுவாசக் கோளாறுகள் எல்லாம் நீங்கும்.

வன்னிக் காயை பொடி செய்து சாப்பிட்டால் மாதவிலக்குப் பிரச்சனை, அதிகமா ரத்தப் போக்குப் பிரச்சனையெல்லாம் தீரும். அந்த அளவிற்கு மருத்துவ குணம் அதில் இருக்கிறது. இதேபோல, இந்த வன்னிக்காய் பொடியை சாப்பிட்டால் விந்தணுக்களுடைய நீர்ப்புத் தன்மை திடப்படுத்தும்.

ஏனென்றால் நல்ல விந்தணு, கருவுறுவதற்கான விந்தணு என்றால், டி.என்.ஏ., ஆர்.என்.ஏ. நல்ல விதத்தில் இருக்க வேண்டும். நீர்த்துப்போன விந்தணுவில் இதெல்லாம் நல்ல விதத்தில் இருக்காது. மிகக் குறைவாகவும் இருக்கும். இந்தப் பொடியை தொடர்ந்து சாப்பிட்டால் விந்து கட்டும். கருவுறும் தன்மையை அதிகப்படுத்தும்.

இதேபோல, மார்ப்புச் சளியையும் இந்த வன்னிக்காய் பொடி எடுக்கும். இந்த வன்னி இலையை அம்மியில் அரைத்து அப்படியே புண் இருக்கும் இடத்தில் கட்டினால் அப்படியே சரியாகிவிடும். எல்லா மரத்தையும் கரையாண் அறிக்கும்.

ஆனால் இதை மட்டும் கரையாண் தொடாது. நேருங்கவே முடியாது. அப்படியென்றால் பார்த்துக் கொள்ளுங்கள் இந்த மரத்தினுடைய அமைப்பு எவ்வளவு வலிமையானது என்று.

இதுதவிர, தெய்வீகத் தன்மைகள் இந்த வன்னி மரத்திற்கு மிக அதிக அளவில் உண்டு. ஏனென்றால் சிவாலயங்களில் பல ஆலயங்களில் தலவிருட்சமாக இருப்பதே இந்த வன்னி மரம்தான். விருதாச்சலத்தை எடுத்துக்கொண்டால் வன்னி மரம்தான் தலவிருட்சம்.

இராம பிராண் இராவணை நோக்கி போர் தொடுக்கப் போகும் முன்பாக வன்னி மரத்தை தொட்டு வணங்கி வலம் வந்து சென்றதாக ஐதீகம். அதேபோல, வள்ளிக் குறத்தியை மணப்பதற்காக முருகன் வன்னி மர வடிவில் காட்சியளித்ததாகவும் ஐதீகம்.

அதேபோல, பஞ்ச பாண்டவர்கள் அஞ்ஞானவாசம் செல்வதற்கு முன்பாக நிராயுதபாணியாக இருக்க வேண்டுமல்லவா, அப்பொழுது அவர்களுடைய ஆடை, அணிகலன்கள், ஆயுதங்கள் அனைத்தையும் ஒரு பெரிய துணியில் வைத்துக் கட்டி, மரஉறி தறித்து கிளம்புவதற்கு முன்பாக, வன்னி மரத்தடியில் வைத்துச் சென்றதாகவும் ஐதீகம். அப்படியானால், இது ஒரு பாதுகாப்பிற்கு உரிய மரம், சத்தியத்திற்கு கட்டுப்பட்ட மரம் என்ற அதன் தன்மை நமக்குத் தெரிகிறது.

வீரியம், வெற்றி என எல்லாவற்றையும் தரக்கூடியத் தன்மை இந்த மரத்திற்கு உண்டு. மருத்துவ குணங்கள் ஏராளமாக இருக்கிறது. சித்த மருத்துவர்கள் நிறைய கூறுவார்கள்.

நமக்குத் தெரிந்த வரையில் ஆன்மீகம், மருத்துவம் என எல்லாவற்றிற்கும் மிகச் சிறந்த மரம். இந்த வன்னி மரத்தினுடைய கன்று நட்டு பாதுகாத்து வளர்த்து வந்தால் எல்லா தோஷங்களும் நீங்கும். அப்படி ஒரு பெரிய சக்தி இந்த வன்னி மரத்திற்கு உண்டு.

---

## விவசாயம் காப்போம்

# உளுந்து பயிரிடும் முறை

மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் தானிய வகைகளில் உளுந்து முக்கிய இடத்தை வகிக்கிறது.

உளுந்து வெடித்துச் சிதறி விதை பரப்பும் செடியினம் ஆகும்.

உளுந்து தெற்காசியாவைப் பூர்வீகமாகக் கொண்டது. இங்கேயே இது பெரும்பான்மையாகப் பயிரிடப்படுகிறது.

தோசை, இட்லி, வடை, பப்படம், முறுக்கு என தமிழர் சமையலில் உளுந்து ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது.

உளுந்து எப்படி பயிரிடுவது'?

இரகங்கள்:

டி 9, கோ 5, வம்பன் 1, வம்பன்2, டிஎம்வி 1, ஏடிடீ 5, ஆடுதுறை 5 ஆகிய இரகங்கள் சாகுபடிக்கு ஏற்றவை.

பருவம்:

பிப்ரவரி, மார்ச் மாதங்களில் உளுந்து சாகுபடி செய்யலாம்.

மண்:

தண்ணீர் தேங்காத செம்மண் வகைகள் ஏற்றது.

நிலம் தயாரித்தல்:

நிலத்தை நன்கு உழவு செய்து சமன்படுத்த வேண்டும். நில மேம்பாட்டுக்கு ஒரு எக்டருக்கு சுண்ணாம்புக்கல் 2 டன் மற்றும் தொழு உரம் 12.5 டன் ஆகியவற்றை அடியுரமாக இட வேண்டும்.

விதையளவு:

ஒரு எக்டருக்கு 20 கிலோ விதை போதுமானது.

விதைநேர்த்தி:

ஒரு கிலோ விதைக்கு டிரைக்கோடெர்மா விரிடி 4 கிராம் அல்லது சூடோமோனஸ் 10 கிராம் கொண்டு விதைநேர்த்தி செய்ய வேண்டும். இல்லையெனில் கார்பன்டாசிம் (அ) திராம் 2 கிராம் ஒரு கிலோ விதையுடன் கலந்து 24 மணிநேரம் கழித்து விதைக்க வேண்டும்.

விதைத்தல்:

விதைகளை 30×10 செ.மீ இடைவெளியில் மானாவாரியாக விதைக்க வேண்டும். அதன்பின் தேவைக்கேற்ப பார்கள் அமைத்துக்கொள்ள வேண்டும். வரப்பு ஓரங்களில் பயிரிடுவதாக இருந்தால் 30 செ.மீ இடைவெளியில் விதைகளை ஊன்ற வேண்டும்.

நீர் நிர்வாகம்:

விதைத்தவுடன் ஒரு தண்ணீரும், பிறகு உயிர்த் தண்ணீர் மூன்றாவது நாளிலும் பாய்ச்ச வேண்டும். காலநிலை மற்றும் மண்ணின் தன்மைக்கேற்ப 10 முதல் 15 நாள்களுக்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்ச வேண்டும். பயிரின் எல்லா நிலைகளிலும் தண்ணீர் தேங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். துளிர்க்கும் பருவத்தில் வறட்சி இருந்தால் 0.5 சதவீதம் பொட்டாசியம் குளோரைடு கரைசலை இலைகளில் தெளிக்க வேண்டும்.

உரங்கள்:

விதைப்பதற்கு முன் அடியுரமாக மானாவாரிப் பயிராக இருந்தால் எக்டருக்கு 12.5 கிலோ தழைச்சத்து, 25 கிலோ மணிச்சத்து, 12.5 கிலோ சாம்பல் சத்து மற்றும் 10 கிலோ கந்தகச்சத்து இடவேண்டும். இறவைப் பயிராக இருந்தால் எக்டருக்கு 25 கிலோ தழைச்சத்து, 50 கிலோ மணிச்சத்து, 50 கிலோ சாம்பல் சத்து மற்றும் 20 கிலோ கந்தகச்சத்து இடவேண்டும்.

மானாவாரி மற்றும் இறவைப் பயிர்களுக்கு டை அம்மோனியம் பாஸ்பேட் 2 சதவீதம் அல்லது யூரியா 2 சதவீதம் பூக்கும் தருணத்திலும் பின்பு 15 நாள் கழித்தும் தெளிக்க வேண்டும்.

களை நிர்வாகம்:

களை முளைப்பதற்கு முன் களைக் கொல்லியான பெண்டிமெத்தலின் பாசன நிலையில் ஏக்கருக்கு 3.3 லிட்டர், மழை நேரமாக இருந்தால் 2.5 லிட்டரை விதைத்த மூன்றாம் நாள் ஒரு எக்டருக்கு 500 லி என்ற அளவில் தெளிக்க வேண்டும் அல்லது களை முளைத்த பின் தெளிக்கும் களைக் கொல்லியான குயிசல்பாப் மருந்தை ஒரு எக்டருக்கு 50 கிராம் வீதம் விதைத்த 15 அல்லது 20ம் நாளில் தெளிக்க வேண்டும். களைக்கொல்லி தெளிக்கவில்லை என்றால் விதைத்த 15வது நாளிலும் மற்றும் 30வது நாளிலும் கைக்களை எடுக்க வேண்டும். பாசன உளுந்துக்கு களை முளைக்கும் முன் ஐசோப்ரோட்ரான் எக்டருக்கு 0.5 கிலோ அளிக்க வேண்டும். இதைத் தொடர்ந்து விதைத்த 30வது நாளில் கைக்களை எடுக்க வேண்டும்.

இலை வழி நுண்ணூட்டமாக ஒரு லிட்டர் தண்ணீரில் என்ஏஏ 40 மில்லி கிராம் மற்றும் சாலிசிலிக் அமிலம் 100 மில்லி கிராம் கலந்து பூக்கும் தருணத்திலும் மற்றும் 15 நாள் கழித்தும் தெளிக்க வேண்டும் அல்லது ஒரு லிட்டர் தண்ணீரில் டிஏபி 20 கிராம் அல்லது யூரியா 20 கிராம் கலந்து பூக்கும் தருணத்திலும் மற்றும் 15 நாள் கழித்தும் தெளிக்கவேண்டும்.

நெல் தரிசு பயறுவகைப் பயிர்களுக்கு ஒரு லிட்டர் தண்ணீரில் டிஏபி 20 கிராம் பூக்கும் தருணத்திலும் மற்றும் 15 நாள் கழித்தும் தெளிக்க வேண்டும்.

அறுவடை:

முதிர்ந்த காய்களைப் பறித்து உலர்த்த வேண்டும். அறுவடை செய்யும்போது பயிர்களை வேரோடு பிடுங்க வேண்டும். இல்லையெனில் முழு தாவரத்தையும் வெட்டி எடுக்க வேண்டும். பின்னர் குவித்து வைத்து உலர்த்தி பயிர்களை பிரிக்க வேண்டும்.

மகசூல்:

ஒரு எக்டருக்கு 250 - 300 கிலோ வரை மகசூல் கிடைக்கும்.

ஊடுபயிர்:

உளுந்துடன் ஊடுபயிராக தட்டப்பயிர் சாகுபடி செய்யலாம்.

# INTERNATIONAL CONFERENCE ON RESILIENT AND SUSTAINABLE ORGANIZATIONS FOR ECONOMIC GROWTH AND DEVELOPMENT HELD AT GURU NANAK COLLEGE...




The PG and Research Department of Commerce organised a two days International Conference on **"RESILIENT AND SUSTAINABLE ORGANIZATIONS FOR ECONOMIC GROWTH AND DEVELOPMENT" on 15th & 16th March 2023,** to commemorate the Golden Jubilee year of the Department of Commerce. The Department had its humble beginning in the year of 1972 and gradually became a post graduate department in the year of 1980. Successfully has grown its wings and became a full-fledged Research Department in the year 1994. At present, all the faculty members of the department are holding Doctorate degree in varied fields of commerce. The department has the credentials of producing 81 Ph.D scholars and currently guiding 26 scholars inclusive of JRF research fellows, Part time and Full- time scholars.

Over the years the undergraduate course is enjoying a very high demand among the young generations. The current academic year 2022-23, the department received 9800 application for 140 students having demand ratio of 1:70

The International Conference started with Tamil Thai Vazhthu and also invoking the blessings of Almighty by rendering the college prayer. **Dr. M. G. Ragunathan, Principal,** Guru Nanak College welcomed the gathering and congratulated the department for organising the International Conference on the most memorable occasion of Golden Jubilee year of the Department.

Dr. Gayathri Harikumar, organizing Secretary and Assistant Professor, PG & Research Department of Commerce introduced the Chief Guest **Mr. Sivakumar S and Guest of Honor Mr. Sunil Jayaram to the August gathering.**

**Dr. T. K. Avvai Kothai, Dean School of Commerce and Head, PG & Research Department of Commerce** highlighted the theme of the conference. In her address, she expressed the aim of the International Conference is to rediscover and adopt sustainable practices on various fields of business namely Banking and Finance, HR, Marketing, IT, Entrepreneurship Development, Management Practices and Economics and allied Fields for the development and growth in the contemporary business scenario.

The Conference received more than 100 research papers from Academicians, Corporate delegates, students and research scholars from various Universities and Colleges across the nation facilitating to exchange ideas, thoughts and informative practices and research experiences.

**The conference had 7 technical sessions focusing on the thrive area of business and commerce.** Out of the research papers received, 64 research articles after plagiarism check were selected and published in the conference proceedings bearing ISBN Number. The Retired Principals Dr. John Morais, Dr. Marlene Morais, Dr. M. Selvaraj and Retired Professor Mr. John Joseph Adaikalam graced the conference with their presence.

**Mr. Manjit Singh Nayar, General Secretary and Correspondent** commended the department and also stated that hybrid format of the conference ensures accessibility to a diverse audience, thereby enabling extensive participations and engagement from various stakeholders.

**Dr. John Morais, former Principal** of the college expounded the history of the department and recollected the services rendered by the stalwart professors for the wellbeing of the student community. **Dr. Marlene Morais, Advisor and Former Principal**, Guru Nanak College ignited the thoughts of ethical and moral values in the student's behaviour. She also highlighted the importance of resilience and sustainability which influence the growth of younger generations.

**Mr. Sivakumar S, Founder and CEO of Capital Market Services, Singapore, Dubai & Melbourne** was the chief guest of the Conference and emphasized the takeaways of World Economic Forum. He addressed that the organisations must prioritize to build resilient economy to meet future needs by diversification rather than decoupling. He further mandated that the organisations have to achieve a net zero future to balance the energy transition and energy resilience to bounce a competitive edge.

**Mr. Sunil Jayaram,** Global Head, Enterprise of Future, Tech Mahindra, India was the Guest of Honor and in his key note address he proposed an initiative of building space economy, focusing on carbon credit, implementing Artificial Intelligence and Machine Learning in business organizations which will help to bring about resilient and sustainable development.

The inaugural session of the International conference came to an end with the vote of thanks proposed by **Dr. R. Tamil Selvi,** Assistant Professor, PG and Research Department of Commerce.

Four Technical sessions were planned on the first day (15.03.2023) of Conference and the first Technical Session was Marketing,chaired by **Dr. R. Shanthi,** Associate Professor, Department of Commerce, University of Madras and coordinated by **Dr. M.Kavitha and Dr. C. Revathy**, Assistant Professors of the Department of Commerce. The deliberations were made on the topics like e-service quality, Green loyalty, Impact of Social media on marketing, food delivery services, teaser advertisements and Green Marketing by the Paper presenters.

Second Session was on Management Practices and other fields, rapporteur by **Dr. J.Arul Suresh,** Assistant Professor, Department of Commerce, Loyola College (Autonomous), Chennai. He emphasized how resilient leaders sustain their energy level to cope up with disruptive changes and overcome difficulties without engaging dysfunctional behavior and compromising the quality. The session was coordinated by **Dr. R. Tamil Selvi and Ms.K.Rajeswari**, Assistant Professors, of commerce Department.

**Dr. S. Shoba and Dr. R. Purushothaman,** Assistant Professors, of commerce Department coordinated the Technical session III Banking and Finance and it was chaired by **Dr. T.Usha Priya,** Vice Principal & Head, PG Department of Banking & Insurance Management, Ethiraj College for Women, Chennai focusing on the thrust areas of Banking and Financial sector.

Economics and Allied Fields was the fourth session rapporteur by **Dr. T. Aryamala**, Associate professor, & Coordinator - Shift ll, Asan Memorial College of Arts and Science, Chennai highlighting the importance of resilience in fostering investments and innovations for economic growth. This session was coordinated by **Dr. P. Sridharan and Dr. P. Balaji,** Assistant Professors, of commerce Department.

**On second day of the Conference (16.03.2023), three technical sessions were planned. Dr Shanthi S,** Associate Professor and Head, Department of Commerce, Stella Maris College, Chennai, chaired the Technical session 5 Human Resources and it was coordinated by **Dr.K.Umadevi and Dr. J. Mahalakshmi,** Assistant Professors, of commerce Department.

The rapporteur pointed out that Human resources management is concerned with achieving strategic outcomes, creation and management of capabilities for sustainable development of the organizations.

**This session was followed by the sixth Technical session on Entrepreneurial Development, chaired by Mr. Praba Santhanakrishnan,** Chief Executive Officer, Cookr India and coordinated by **Dr. C.P. Senthil Kumar and Dr. R. Geetha**, Assistant Professors, of commerce Department The resource person highlighted that Entrepreneurship contributes to build resilient infrastructure promoting inclusive

and sustainable industrialization and fostering innovation.

**Dr. Gayathri Harikumar , Organising Secretary and Assistant Professor of the department coordinated the last session of the International Conference Information Technology moderated by Prof. Sridhar Narayanan,** Founder, G.A.M.E - Grand Alliance for Management, Excellence, Hon.Secretary of NHRDN Chennai Chapter & Chairman of Education Committee at MCCI. He commented that Technology is a crucial enabler of sustainability and resilience for accelerating Net Zero Transitions to create more comprehensive strategies to minimise waste, recycling, substitution of materials, transforming production processes, pollution control and efficient utilisation of resources.

The hybrid mode was implemented to enable the paper presenters to present their Research papers on both offline and online to Encourage more exchange of ideas, thoughts and knowledge.

The Valedictory session on the second day of the Conference was begun by invoking the Gods blessing followed by the Introduction of the Chief Guest and Guest of Honour by **Dr.Gayathri Harikumar Organizing Secretary and Asst. Professor, PG & Research Programme of Commerce.**

The detailed consolidated Conference Report about the two days conference was presented by the Convener **Dr.T.K.Avvai Kothai, Head PG & Research Department of Commerce & Dean, School of Commerce.**

**Prof. Ranganathan. J, Honorary Consul of Myanmar, Chief Guest offered his** Valedictory Address. In his address, he highlighted 5 B's of Myanmar comprising Bharatanatyam, Buddhism, Burma Teak, Business and Body. He suggested the Integration of India and Myanmar in business and education for further prospects. He also mentioned that education has the power to kill Terrorism and economic sustainability can happen only by having social and environmental sustainability.

**The Guest of Honor Mr. K. Srinivas,** Vice President Sales, Kokuyo Camlin Ltd, Mumbai, India delivered his valedictory speech. He stressed on learning and knowledge is the key to sustainability of an organizations. Investing in knowledge, innovation and technology helps the organization to sustain which leads to the overall growth of economy.

**Dr Umadevi. K, Asst.Professor, PG & Research Department of Commerce** proposed the Vote of thanks and the International Conference came to an end by National Anthem.

## Anna university hosted the G20 University Connect Lecture Series on 'Engaging Young Minds' ...




Anna university hosted the G20 University Connect Lecture Series on 'Engaging Young Minds' on 10th March 2023.

B. Vishal Dev Studying in Biomedical engineering in Anna University residing in Ramaniyam marvel apartment, Velachery and his team have done a short film about the future and they have won 3rd place ..

Students across various universities participated in this contest and close to 93 short films were shortlisted.

Vishal dev and team was awarded with a certificate of appreciation and a cash prize of ten thousand during the event held at Anna University.

SHORT FILM CONTEST - BATTLE OF CREATIVE MINDS 2023 is a special year for our Nation since India holds the G20 Presidency and the theme is "One Earth; One Family; One Future".

This contest was done among the young creative minds to bring revolution to our nation that was organised containing their thoughts regarding How India can lead the G20 countries on the following themes: Health, Education, Energy, Environment, Climate change, Women Empowerment, Anti-Corruption, Employment. Finance, Life (Lifestyle for Environment)Agriculture and Film should address only themes of G20 presidency of India.







The objective of this contest was to engage with students from 75 Universities around 56 locations across India.The government has initiated the G20 University Connect, which is being jointly organized by the Ministry of External Affairs, Government of India, and Research and Information System for Developing Countries (RIS).

When approached Vishal and his team they expressed their joy and thanked the G20 forum for this initiative which had triggered them to do a short film and also they appreciated all the students who participated in this event which had given a chance to showcase their creativity .






# இந்த வார ராசிபலன்



### மேஷம்

இந்த வாரம் நீங்கள் உங்கள் நேரத்தை வீட்டின் குழந்தைகளுடன் செலவிட வேண்டும் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.



### ரிஷபம்

இந்த வாரம், உங்கள் மனம் தொண்டு வேலைகளில் அதிகமாக ஈடுபடும், உங்கள் குடும்பத்துடன் ஒரு மத நிகழ்ச்சியை ஏற்பாடு செய்ய முடிவு செய்யலாம்.



### மிதுனம்

இந்த வாரம், உங்கள் நண்பர்கள் உங்களுக்கு ஆதரவளிப்பது, அனைத்து வகையான நிதி சிக்கல்களிலிருந்தும் வெளியேற உதவும்.



### கடகம்

இந்த வாரம், மாணவர்களின் விடுமுறை நேரத்தின் பெரும்பகுதி வீட்டுப் பொருட்களை பழுது பார்க்கும் முயற்சியில் வீணடிக்கப்படலாம்.



### சிம்மம்

இந்த வாரம், உங்கள் குடும்பத்தில் உள்ள பலர் உங்களுடன் நேரடியாகப் பேசுவதைக் காண மாட்டார்கள், நீங்கள் உங்களை முதன்மையாகக் கருதுவதுதான்.



### கன்னி

இந்த வாரம் உங்கள் பழைய நண்பர்கள் சிலரை சந்திப்பது போல் உணர்வீர்கள், இதன் காரணமாக நீங்கள் வேலையில் இருந்து ஓய்வு எடுக்கலாம்.



### துலாம்

இந்த வாரம் நீங்கள் அந்த சர்ச்சையை முடித்துக் கொண்டு அவர்களுடனான உங்கள் உறவை மேம்படுத்த முயற்சிப்பீர்கள்.



### விருச்சிகம்

இந்த வாரம் அவர்களின் சிகிச்சையில் சரியான மாற்றம் ஆரோக்கியத்தில் நல்லிணக்கத்தைக் கொண்டுவருவதற்கு உதவியாக இருக்கும்.



### தனுசு

இந்த வாரம் குடும்ப அமைதியை உருவாக்கவும், உங்கள் உறுப்பினர்களுடனான உறவை மேம்படுத்தவும் கூடுதல் முயற்சிகளை மேற்கொள்வீர்கள்.



### மகரம்

இந்த வாரம், விடுதிகள் அல்லது உறைவிடப் பள்ளிகளில் வசிக்கும் மாணவர்கள் சில சிறப்புக் கவனத்துடன் கடினமாக உழைக்க வேண்டும்.



### கும்பம்

இந்த வாரம், உங்களுக்கு மிகவும் தேவைப்படும் நேரத்தில் ஒரு நண்பர் அல்லது நெருங்கிய நண்பர் உங்களைக் காட்டிக் கொடுக்கலாம்.



### மீனம்

இந்த வாரம் நீங்கள் சமூகத்தில் மரியாதை பெறுவீர்கள், இருப்பினும், இந்த நேரத்தில் உங்கள் உடன்பிறந்தவர்களின் ஆரோக்கியம் பலவீனமாக இருக்கும்.

# YOGASANAM


## விபரீதகரணீ



***பலன்கள்:-***

நுரையீரலைப் பலப்படுத்துகிறது
இருதய நலனைப் பாதுகாக்கிறது
இரத்த ஓட்டத்தை சீராக்குகிறது
தைராய்டு சுரப்பியின் செயல்பாடுகளை சீராக்குகிறது
நரம்பு மண்டலத்தைப் பலப்படுத்துகிறது
சீரண மண்டலத்தின் இயக்கத்தை செம்மையாக்குகிறது
இடுப்பு மற்றும் முதுகை உறுதியாக்குகிறது
இடுப்பில் உள்ள அதிகக் கொழுப்பைக் கரைக்கிறது
கழுத்து மற்றும் முதுகுவலியைப் போக்க உதவுகிறது
உடல் முழுமைக்கும் ஆற்றல் அளிக்கிறது
மாதவிடாய் மற்றும் மாதவிடாய் நிற்கும் காலத்தில் ஏற்படும் வலிகளைத் தவிர்க்க உதவுகிறது
மறு உற்பத்தி உறுப்புகளின் இயக்கத்தை மேம்படுத்துகிறது
உடல் எடையை சீராக பராமரிக்க உதவுகிறது
கால் வலியைப் போக்குகிறது
கணுக்கால் வீக்கத்தை சரி செய்ய உதவுகிறது
வெரிகோஸ் வெயின்ஸ் பிரச்சினையை சரி செய்ய உதவுகிறது
இளமையான தோற்றத்தைத் தருகிறது முகத்தில் ஏற்படும் சுருக்கங்களைப் போக்குகிறது
தலைவலியைப் போக்க உதவுகிறது
கண் பார்வையைக் கூர்மையாக்குகிறது
செவித் திறனை மேம்படுத்துகிறது
தூக்கமின்மையைப் போக்குகிறது
மன அழுத்தத்தைப் போக்குகிறது
முன அமைதியை வளர்க்கிறது

# எட்டு வடிவ நடைப்பயிற்சியால் ஏற்படும் நன்மைகளில் சில




வெறும் கால்களின் நடப்பதால் பாதங்களில் உள்ள வர்மப் புள்ளிகள் தூண்டப் பெற்று உடல் உள்ளுறுப்புகளின் செயல்பாடு மேம்படுத்தப்படுகிறது.

சளியைப் போக்குகிறது.

ஆஸ்துமா உள்ளிட்ட மூச்சுக் கோளாறுகளை சரி செய்கிறது.

நுரையீரல் நலத்தைப் பாதுகாக்கிறது.

இருதய நலனைப் பாதுகாக்கிறது.

உடலின் ஆற்றலை அதிகரிக்கிறது.

செரிமான மண்டலத்தின் இயக்கத்தை சீர் செய்கிறது.

மலச்சிக்கலைப் போக்குகிறது.

இரத்த அழுத்தத்தைச் சீராக வைக்க உதவுகிறது.

இரத்தத்தில் சர்க்கரை அளவை சீராக வைக்க உதவுகிறது.

ஒற்றைத் தலைவலி உள்ளிட்ட தலைவலி பிரச்சினைகளிலிருந்து நிவாரணம் அளிக்கிறது.

மூளைத் திறனை மேம்படுத்துகிறது.

கண் பார்வையைக் கூர்மையாக்குகிறது.

காது கேட்கும் திறனை அதிகப்படுத்துகிறது.

அதிக உடல் எடையைக் குறைக்கிறது.

தைராய்டு பிரச்சினைகளை சரி செய்ய உதவுகிறது.

தலைமுதல் குதிகால் வரை உடல் முழுவதிலும் வலியைப் போக்குகிறது.

மூட்டுகளைப் பலப்படுத்துகிறது மூட்டுப் பிரச்சினைகளை குணப்படுத்துகிறது.

பாத வெடிப்பைப் போக்குகிறது.

பித்தப்பை மற்றும் சிறுநீரகத்திலுள்ள கற்களைக் கரைக்கிறது.

சிறுநீரகக் கோளாறுகளைக் குணமாக்குகிறது.

தூக்கமின்மையைப் போக்குகிறது.

இளமையான தோற்றத்தைத் தருகிறது.

மன அழுத்தத்தைப் போக்குகிறது மனதில் அமைதியை ஏற்படுத்துகிறது.

# Entertainment Corner

## Arusuvai Samayal

### BABY JACKFRUIT CURRY

***INGREDIENTS :-***

Baby Jackfruit – 1/2, peeled, steam cooked and chopped
Oil – 2 tsp
Dry Red Chillies – 2
Curry Leaves – few
Mustard Seeds – 1/4 tsp
Onion – 1, julienned
Salt – 1/4 tsp
Juice of 1/2 Lime

For the masala:

Coriander Seeds – 1/2 tsp
Black Peppercorns – 1 tsp
Cinnamon – 1/4 inch stick
Coconut – 1/2 cup, grated
Garlic – 3 to 4 cloves
Ginger – 1/4 inch piece
Turmeric Powder – 1/4 tsp
Salt as per taste

***PROCEDURE:-***

1. Dry roast all the masala ingredients and grind to a fine paste.
2. Heat oil in a pan.
3. Fry the curry leaves, red chillies and mustard seeds for 30 seconds.
4. Saute the onions till soft and light golden.
5. Add the ground masala and a little water.
6. Stir well and cook till the oil starts to rise to the top.
7. Add the jackfruit pieces and fry for a minute.
8. Add salt and pour 1/2 cup of water.
9. Cover the pan with a lid and cook till the gravy is thick and jackfruit is tender.
10. Remove and serve hot with rice.

Tip: To steam cook, bring a pan of water to a boil. Add the jackfruits to a sieve and place it on the pan. Ensure the water does not touch the jackfruits. Cover and reduce flame to low. Cook till tender.

## SUDOKU ANSWER

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 7 | 6 | 5 | 3 | 2 | 8 | 1 | 9 |
| 2 | 5 | 8 | 1 | 4 | 9 | 7 | 3 | 6 |
| 1 | 9 | 3 | 7 | 6 | 8 | 4 | 2 | 5 |
| 6 | 4 | 7 | 8 | 2 | 5 | 1 | 9 | 3 |
| 5 | 1 | 9 | 3 | 7 | 6 | 2 | 8 | 4 |
| 3 | 8 | 2 | 9 | 1 | 4 | 5 | 6 | 7 |
| 9 | 2 | 4 | 6 | 8 | 7 | 3 | 5 | 1 |
| 7 | 6 | 1 | 2 | 5 | 3 | 9 | 4 | 8 |
| 8 | 3 | 5 | 4 | 9 | 1 | 6 | 7 | 2 |

## SUDOKU GAME

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 4 | | 8 | | | |
| | 6 | | | 7 | | | 1 | |
| 7 | | 2 | | 9 | | 5 | | 4 |
| | 9 | | 7 | | 4 | | 3 | |
| | | 7 | | 5 | | 8 | | |
| | 8 | | 9 | | 6 | | 5 | |
| 9 | | 4 | | 1 | | 7 | | 8 |
| | 7 | | | 6 | | | 4 | |
| | | | 2 | | 7 | | | |

## விடுகதை விளையாட்டு

1. காலாறும் கப்பற்கால் கண்ணிரண்டும் கீரை விதை -அது என்ன?

2. மழையோடு வருகின்ற மஞ்சள் புறாவை வெட்டினால் ஒரு சொட்டு இரத்தம் வராது -அது என்ன?

3. உருவத்தில் சிறியவன் உழைப்பில் பெரியவன் -அவன் யார்?

4. எண்ணெய் வேண்டா விளக்கு எடுப்பான் கை விளக்கு -அது என்ன?

5. வித்தில்லாமல் விளையும் வெட்டாமல் சாயும் -அது என்ன?

6. அம்மா பின்னிய நூலை அவிழ்த்தால் போச்சு -அது என்ன?

7. மணம் இல்லாத மல்லிகை மாலையில் மலரும் -அது என்ன?

8. அந்திவரும் நேரம் அவளும் வரும் நேரும் -அது என்ன?

9. மண்ணுக்குள் இருக்கும் மங்கைக்கு அழகு தரும் -அது என்ன?

10. இரவும் பகலும் ஓய்வு இல்லை படுத்தால் எழுப்ப ஆள் இல்லை -அது என்ன?

## சென்ற வார விடுகதை விளையாட்டு விடைகள்

1. குயில்
2. சோளம்
3. பஞ்சு
4. மின்விசிறி
5. தொலைபேசி
6. நேருப்பு
7. சேவல்
8. சோளக்கதிர்
9. உப்பு
10. ஊளுந்து

## சொல் விளையாட்டு

பிறமொழிச் சொல்லைக் கண்டுப்பிடியுங்கள்...

| | | | |
|---|---|---|---|
| | ச | தி | ப் |
| பிரமிப்பு ? | | அ | |
| | கை | பு | ச |

## சென்ற வார சொல் விளையாட்டு விடைகள்

ஒற்றுமை

உங்களின் திறமைகளை வெளிப்படுத்த, உங்கள் ஓவியம், கைத்திறம், கோலம் மற்றும் கவிதைகளை உங்களின் புகைப்படத்தோடு சேர்த்து வாட்சப் அல்லது மெயில் மூலம் எங்களுக்கு அனுப்பி வையுங்கள். இதற்கு கட்டணம் ஏதும் கிடையாது.

Publisher : R. Rajesh
Editor : Saranya Rajesh
Designer : D. Deepa
Journalist : P. Praveen
Marketing Executive : C. Karthikeyan

இது எங்களுடைய ஒரே பத்திரிக்கை நிறுவனம்
This is our only concern

Express Velachery
Weekly - News Paper
37F, Diya Complex
Velachery Main Road, Vijayanagar,
Velachery, Chennai - 600042.
Timing: Monday to Friday 9.30 am to 6.00 pm
Saturday 9.30 am to 12.30 pm
044-42077328 / 7305837388
E-mail : expressvelachery@gmail.com


DISCLAIMER
Readers are advised to make appropriate enquiries while responding to advertisements in these columns. Express Velachery does not vouch for any claims made by the Advertisers. The Printers, Publishers, Editor and Owners of Express Velachery shall not be held responsible/ liable for any consequences, in case such claims are found to be false.

TNBIL04133 R.Dis.No.1845/2014



# CHUTTIES CORNER

## தனித்திறமை பகுதி






**Joshua Daniel**
Class 5
St. Theresa Bacq Public School,
Bangalore.






**Yeddanapudi Jeyan**
Class 5
Delhi Public School,
Nacharam,
Telangana.

## PAPER CRAFT




## படத்தில் உள்ள 10 வித்தியசங்களை கண்டுபிடியுங்கள்...!



## MEHNDI









Owned & Published R.Rajesh, No.17, 100ft, By Pass Road, Velachery, Ch-42. Printed by S.Ali Mohammed Sayeed, Mo.22/49, Subedar Hussain Street, Border Thottam, Royapettah, Ch-14. Editor: SARANYA RAJESH